அ.வ.எண்.183/2017

**<u>வா.சா.1 குறுக்கு விசாரணை:</u>** நாள் 4.2.2019

என் சகோதர சகோதரிகள் அனைவருக்கும் திருமணமாகி விட்டது என்றால் சரிதான். அவர்கள் பெங்களூரில் தனித்தனி வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு அங்கு தனித்தனியாக குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது. என் தகப்பனார் பெயரிலுள்ள குடும்ப அட்டை பெங்களூர் முகவரியைக் கொண்டது என்றால் சரிதான். என் தகப்பனார் பெங்களூரில் நவ்ரங் என்ற லாட்ஜில் மேலாளராக இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் முதலில் தினத்தந்தி அலுவலகத்தில் பணியாற்றி விட்டு பின்னர் பெங்களூர் சென்றார். என் தகப்பனார் திருமணத்திற்கு முன்னரே பெங்களூர் சென்று விட்டார். என் தகப்பனார் பெங்களூரில் சொந்த இடம் வாங்கி வீடு கட்டினார் என்றால் சரியல்ல. வாடகைக்குத்தான் இருந்தார். தற்போது நான் பெங்களூரில் குறிப்பிட்டிருக்கும் முகவரிலுள்ள வீடு சொந்த வீடு என்றால் சரியல்ல. அது வாடகை வீடு. காயாமொழியில் எங்களுக்கு என நிரந்தர குடும்ப அட்டை கிடையாது. என் தகப்பனாருக்கும் காயாமொழி முகவரியில் குடும்ப அட்டை எதுவும் வழங்கப்படவில்லை. நான் என் பள்ளிப்படிப்பை பெங்களூரில் படித்தேன். 2, 4, 5 வாதிகளான என் சகோதர சகோதரரிகளும் அவர்களும் பெங்களூரில்தான் படிப்பை முடித்தார்கள். தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டைக்கட்டி 60 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். தாவா வீடு என் தாத்தா குருசாமி நாடாரால் கட்டப்பட்டது என்றால் சரிதான். தாவா வீட்டிற்கு வீட்டுத்தீர்வை முதலில் குருசாமி நாடார் பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். அதன்பின்னர் அந்த வீட்டிற்கு தீர்வை இவ்வழக்கு 2ம் பிரதிவாதி சமுத்திபாண்டி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா வீட்டில் நானும், என் தந்தையும், 1ம் வாதியும் ஒருபோதும் காயாமொழியில் வசித்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. 2009ம் ஆண்டு மருத்துவம் பார்ப்பதற்காக பெங்களூர் சென்றதாக சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் ஊர்திருவிழாவிற்கு வரும்போது தாவா வீட்டில் தங்கியது கிடையாது என்றால் சரியல்ல. நாங்கள் தங்கியிருக்கிறோம். சமுத்திரபாண்டியிடம்

2013ம் வருடம் வீட்டிற்காக தண்ணீர் ரசீது, வீட்டுத்தீர்வையை நாங்கள்தான் செலுத்த சொன்னோம் என சொல்லியிருப்பது பொய் என்றால் சரியில்ல. என் தகப்பனாரிடம் பணம் வாங்கித்தான் 2ம் பிரதிவாதி வீட்டுத்தீர்வை செலுத்தி வந்தார் என சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளதாக சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டா என் தகப்பனார் பெயருக்கு பெறப்பட்ட மோசடியான பட்டா என்றால் சரியல்ல. வா.சாஆ.3 பட்டாவும் எங்கள் பெயருக்கு மோசடியாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா என்றால் சரியல்ல. என் தகப்பனார் காலத்திற்கு பின்னர் தாவா வீட்டில் நாங்கள் குடியிருந்து இருக்கிறோம் என்று சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. நாங்கள் யாரும் 2ம் பிரதிவாதியிடம் வீட்டை பராமரிக்க பணம் கொடுக்கவில்லை. என் தகப்பனார் கொடுத்தார். என் தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தது சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் எந்தெந்த வகைக்கு எவ்வளவு பணம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார்தான் கொடுத்தார். தாவா வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கிடையாது. ஆனால் கிணறு உள்ளது. தண்ணீர் பணம் கட்டுவதற்கு என் தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என பிராதில் சொல்லியிருந்தால் அது தவறு. என் தகப்பனார் பணம் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு மின்னிணைப்பு முதலில் என் தாத்தா பெயரில் இருந்தது. தற்போது 2ம் பிரதிவாதி சமுத்திரபாண்டி அவர் பெயருக்கு மாற்றிக்கொண்டார். என் தகப்பனார் பெயருக்கு ஒருகாலத்திலும் மின்னிணைப்போ, வீட்டு வரிவிதிப்போ இருந்தது கிடையாது. தாவா வீட்டில் சுமார் 7 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதி வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் 2ம் பிரதிவாதி சமுத்திரபாண்டியிடம் முறையாக வாடகை செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வீட்டின் வரிவிதிப்பை எங்கள் பெயருக்கு மாற்றித்தரச்சொல்லி நான் பஞ்சாயத்திலும் ஊராட்சி ஒன்றியத்திலும் மனு கொடுத்தேன். அவர் சொத்து சம்பந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யச்சொல்லி நோட்டிஸ் அனுப்பியிருந்தார் என்றால் சரிதான்.

தாவா சொத்து சம்பந்தமான உரிமை பிரச்சனை சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது பஞ்சாயத்தில் பெயர்மாற்றம் செய்ய முடியாது என பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராஜாவை வெளியேற்ற நான் திருச்செந்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது சட்ட முரணான வழியில் பிரதிவாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 18.8.2018ல் சமுத்திரபாண்டி என்மீது காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 இறப்புச்சான்றிதழ் என் தந்தையின் இறப்புச் சான்றிதழ் என்றால் சரிதான். அதில் அவரது நிரந்தர முகவரி பெங்களூர் முகவரி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா வீட்டை நானோ என் தகப்பனாரோ ஒருபோதும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. வருடம் ஒருமுறை ஊர்த்திருவிழாவிற்கு வருவது வழக்கம். தாவா சொத்து என் தாத்தா குருசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா 2ம் பிரதிவாதிக்கு அவரது சொத்தை குடும்ப ஏற்பாட்டின்படி விட்டுக்கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிதான் 1ம் பிரதிவாதியை வாடகைக்கு வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 2ம் பிரதிவாதி பெயர்மாற்றம் செய்து அவர் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து அனுபவஅடிப்படையிலும், வாரிசு அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் வாசித்துக் காண்பிக்கப்பட்டு சரி என ஒப்புக்கொள்ளப்பட்டபின் கையொப்பம் பெறப்பட்டது.

ஓம்.மு.சிவாஜி செல்லையா
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருச்செந்தூர்